# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. தொகுதி வாரியாக பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) பாக நிலை முகவர்கள் (BLA - 2) பயிற்சி பாசறைக் கூட்டங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவிப்பு!



கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை முகாமில் படிவத்தில் நிரப்பப்படும் விவரங்களை பிரத்தியேகமாக செயலியில் (APP) உள்ளீடு செய்யப்பட வேண்டியது குறித்து தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி, கோவில்பட்டி சட்டமன்ற தொகுதி, விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிகளில் வாக்குச்சாவடி வாரியாக நியமிக்கப்பட்டுள்ள பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) பாக நிலை முகவர்கள் (BLA 2), தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் பயிற்சி பாசறைக் கூட்டங்கள் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் படி நடைபெற உள்ளது.

| தேதி | நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 29.06.2025 | காலை 10 மணி | விளாத்திகுளம் சட்ட மன்ற தொகுதி | G.V.மஹால், விளாத்திகுளம் |
| 29.06.2025 | மாலை 6 மணி | தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி | கலைஞர் அரங்கம்,தூத்துக்குடி |
| 30.06.2025 | மாலை 6 மணி | கோவில்பட்டி சட்டமன்ற தொகுதி | சத்தியபாமா திருமண மண்டபம், கோவில்பட்டி |

**அமைச்சர் பி. கீதாஜீவன்**
செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.

# விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க. பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் பாகநிலை முகவர்கள் (BLA 2) பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அறிவிப்பு!



கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் - துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை முகாமில் படிவத்தில் நிரப்பப்படும் விவரங்களை பிரத்தியேகமாக செயலியில் (APP) உள்ளீடு செய்யப்பட வேண்டியது குறித்து விருதுநகர் தெற்கு மாவட்டத்தில் உள்ள அருப்புக்கோட்டை, சாத்தூர், திருவில்லிபுத்தூர், இராஜபாளையம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒன்றிய / நகர / பேரூர் கழகங்களில் இன்று (29.06.2025 - ஞாயிற்றுக்கிழமை) கீழ்க்கண்ட பட்டியலில் உள்ளவாறு பயிற்சி கூட்டங்கள் நடைபெற உள்ளது. இக்கூட்டங்களை ஒன்றிய / நகர/ பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக்கழக தொகுதி பொறுப்பாளர்கள், தேர்தல் ஒருங்கிணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர்கள், ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

| தேதி | தொகுதி | இடம் |
|---|---|---|
| 29.06.2025 ஞாயிறு காலை 10 மணி | அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி | வேல்ராஜன் மண்டபம், அருப்புக்கோட்டை |
| 29.06.2025 ஞாயிறு பகல் 11 மணி | சாத்தூர் சட்டமன்றத் தொகுதி | வெங்கடேஸ்வரா பேலஸ், சாத்தூர் |
| 29.06.2025 ஞாயிறு மாலை 4 மணி | திருவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம் | கந்தசாமி - அழகம்மாள் மண்டபம் தம்பிபட்டி |
| 29.06.2025 ஞாயிறு மாலை 5 மணி | திருவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதி திருவில்லிபுத்தூர் ஒன்றியம் திருவில்லிபுத்தூர் நகரம் | லட்சுமி நாராயணா மண்டபம்,இந்திராநகர் திருவில்லிபுத்தூர் |
| 29.06.2025 ஞாயிறு மாலை 6 மணி | இராஜபாளையம் சட்டமன்றத் தொகுதி | J.S.A.மண்டபம் ஞாயிறு மாலை 06.00 |

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**
செயலாளர்
விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க.

'ஓரணியில் தமிழ்நாட்டை ஒருங்கிணைக்க உடன்பிறப்பே வா!'

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக BLA2, BDA (டிஜிட்டல் தொழில்நுட்பம்) பயிற்சிக் கூட்டம்!

## மாவட்ட பொறுப்பாளர் – செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழகத் தலைவர் - தலைவர் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி "ஓரணியில்தமிழ்நாடு" என்ற முன்னெடுப்பின் கீழ் கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து விழுப்புரம் மாவட்டத்திற்குட்பட்ட செஞ்சி சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒன்றிய, பேரூர் கழகங்களில் வாக்குச்சாவடி வாரியாக பாகநிலை முகவர்கள் (BLA-2) மற்றும் பூத் டிஜிட்டல் முகவர் (BDA) பயிற்சிக் கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்ற தொகுதிகளுக்கு தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் நியமிக்கப்பட்டிருக்கும் OTN AC மற்றும் தொகுதி பார்வையாளர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட தேதிகளில் தொகுதி வாரியாக ஒன்றிய பேரூர் கழக (BLA-2) மற்றும் பூத் டிஜிட்டல் முகவர் (BDA) பயிற்சி நடைபெறவுள்ளது.

| நாள்& நேரம் | தொகுதி | ஒன்றியம் | இடம் |
|---|---|---|---|
| 29.06.2025 காலை 10.00 மணி | செஞ்சி | செஞ்சி - கிழக்கு -மேற்கு -மத்திய ஒன்றியம் செஞ்சி, அனந்தபுரம் பேரூர் கழகம் | வள்ளி அண்ணாமலை திருமண மஹால் செஞ்சி |
| 29.06.2025 மாலை 04.00 மணி | செஞ்சி | மேல்மலையனூர் கிழக்கு - மேற்கு மத்திய ஒன்றியம் | சிவனருள் திருமண மண்டபம் மேல்மலையனூர் |

பயிற்சிக் கூட்டத்தில் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் மட்டுமன்றி BLA2க்களும் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**செஞ்சி கே.எஸ். மஸ்தான் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

## என்.எம்.கதிரேசன் தலைமை ! இரா.லட்சுமணன் முன்னிலை !

# 39வது வட்டத்தில் பாக முகவர்கள் கூட்டம் !

### ஆர்.டி.சேகர் – கலாநிதி வீராசாமி – ஜே.ஜே.எபினேசர் – கே.வி.லோகேஷ் பங்கேற்பு !

*சென்னை, ஜீன்29*

*சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 39வது வட்ட கழகத்திற்குட்ட பாக முகவர்கள், மற்றும் பாக நிலை உறுப்பினர்களு க்கான ஆலோசனை பயிற்சி கூட்டம் இன்று (29.06.2025 ஞாயிற்றுக் கிழமை) மாலை 4.00 மணியளவில் புதுவண்ணை, டி.எச். ரோடு, ஜெ.ஜெ.கார்டன் கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*வட்ட கழக செயலாளர் என்.எம்.கதிரேசன் தலைமையில் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் முன்னிலையில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வடசென்னை நாடளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, தொகுதி பொறுப்பளர் கே.வி.லோகேஷ், ஆகியோர் ஆலோசனை மற்றும் பயிற்சியினை 39வது வட்டத்திற்குட்பட்ட பாக முகவர்கள்,மற்றும் பாக நிலை உறுப்பினர்களுக்கு வழங்கிடும் கூட்டம் நடைபெற உள்ளது.*

*அதுசமயம் மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்டகழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட பகுதி ,வட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொள்கிறார்கள்.*

## தென்காசி வடக்கு மாவட்டம்

# வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்டம், வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் கோ.பூசைப்பாண்டியன் அவர்கள், தனது உடல்நிலை காரணமாக முழு ஈடுபாட்டுடன் கழகப் பணியாற்ற முடியாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக, **டி.எம்.எஸ். அன்புக்கரசு** (7/53ஏ, மேலத் தெரு, வடமலாபுரம், தென்காசி மாவட்டம்.) அவர்கள் வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றியக் கழகப்பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**" அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் : 28.06.2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## தென்காசி வடக்கு மாவட்டம்

# மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியம், சேர்ந்தமரம் கஸ்பா ஊராட்சி சேர்ந்தமரம் மேற்கு, சேர்ந்தமரம் கிழக்கு, சேர்ந்தமரம் தெற்கு கிளைக் கழகங்களுக்குட்பட்ட பாக எண்கள். மற்றும் கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தென்காசி வடக்கு மாவட்டம், மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட சேர்ந்தமரம் கஸ்பா ஊராட்சியில் உள்ள **சேர்ந்தமரம் கிளைக் கழகம் சேர்ந்தமரம் மேற்கு, சேர்ந்தமரம் கிழக்கு, சேர்ந்தமரம் தெற்குஆகிய 3 கிளைகளாக** பிரிக்கப்பட்டு பின்வரும் வாக்குச் சாவடி பாக எண்கள் கொண்டதாக அமையும்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட கிளைகளுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**சேர்ந்த மரம் மேற்கு கிளை :** 80, 83, 84 ஆகிய 3 வாக்குச் சாவடி பாக எண்கள்.

**சேர்ந்த மரம் கிழக்கு கிளை :** 81, 82, ஆகிய 2 வாக்குச் சாவடி பாக எண்கள்.

**சேர்ந்த மரம் தெற்கு கிளை :** வாக்குச் சாவடி பாக எண். 79

**கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **சேர்ந்தமரம் மேற்கு, சேர்ந்தமரம் கிழக்கு, சேர்ந்தமரம் தெற்கு** ஆகிய கிளைக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சேர்ந்த மரம் மேற்கு கிளை :**
பொறுப்பாளர் : பி. முருகன், பால்பண்ணை தெரு, சேர்ந்தமரம்-627 857.

**சேர்ந்த மரம் கிழக்கு கிளை :**
பொறுப்பாளர் : எஸ்.செல்வராஜ், 77/5, வடக்கு தெரு, சேர்ந்தமரம்-627 857.

**சேர்ந்த மரம் தெற்கு கிளை :**
பொறுப்பாளர் : கே.ஜெயராஜ், 82ஏ/1, கீழத் தெரு சேர்ந்தமரம்-627 857

**" அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் : 28.06.2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## நீலகிரி மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புக்கான தேர்தல் தேர்தல் முடிவு

## தலைமைக் கழக அறிவிப்பு!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் நீலகிரி மாவட்டத்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.எம்.ராஜு அவர்கள் மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதாலும், முஸ்தபா அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாலும்,2 (இரண்டு) தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் நிரப்பப்பட வேண்டி இருப்பதால்; பொதுக்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி ஷீலாகேத்ரின் அவர்கள் மறைவெய்திய காரணத்தாலும் - க. ராஜா (எ) ராஜகுமார் மற்றும் மா.தொரை ஆகியோர் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டதாலும், 3 (மூன்று) பொதுக்குழு உறுப்பினர்கள் நிரப்பப்பட வேண்டி இருப்பதால், மேற்சொன்ன பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, ஜீன் 25 (புதன்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்."** என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

நீலகிரி மாவட்டம், இரண்டு தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பொறுப்புகளுக்கு **கே. தம்பி இஸ்மாயில், திருமதி சுனிதா நேரு** ஆகிய இரண்டு பேர் மற்றும் மூன்று பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புகளுக்கு அ.லியாகத் அலி, ந.மகேஷ், திருமதி எம்.வாணீஸ்வரி ஆகிய மூவர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

**நீலகிரி மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்களாக**

**கே.தம்பி இஸ்மாயில்**,30/40, பக்கீர் முகமது தெரு, மெயின் பஜார், உதகை, நீலகிரி மாவட்டம்-643 001 **அவர்களும்;**

**திருமதி.சுனிதா நேரு** 72-பி, குமரன் நிலையம், காமராஜபுரம், உழவர்சந்தை முன்புறம், குன்னூர், நீலகிரி மாவட்டம் **அவர்களும்;**

**நீலகிரி மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர்களாக**

**அ.லியாகத் அலி** 13/168, காசிம் வயல், கூடலூர் பஜார், நீலகிரி மாவட்டம் - 643 212 **அவர்களும்;**

**ந.மகேஷ்**, 1/37, கெந்தொரை கிராமம் & அஞ்சல், உதகை, நீலகிரி மாவட்டம் - 643 002 **அவர்களும்;**

**திருமதி. எம்.வாணீஸ்வரி**, 8பி-1, பீட்டன்ஸ் சாலை, பேபி ஹால் அருகில், உதகை, நீலகிரி மாவட்டம்-643001 **அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக** அறிவிக்கப்படுகிறது.

**" அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் : 28.06.2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ந.உ. சிவசாமி
## ஜூன் 29 (2023)



**இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**மாவட்டப் பிரதிநிதியாகவும் – முப்பது ஆண்டுகள் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் – பத்தாண்டுகள் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து முத்துப்பேட்டை பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர், மாவட்ட வேளாண்மை விற்பனை குழு உறுப்பினர், பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர், எடையூர் சங்கந்தி கூட்டுறவு சங்க தலைவர் என பல்வேறு அமைப்புகளில் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**